# பன்னோக்குப் பார்வையில் தமிழ்மொழியும் இலக்கியமும்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

**தொகுதி - III**

பதிப்பாசிரியர்கள்

**முனைவர் க. முருகேசன்**
**முனைவர் மா. சிதம்பரம்**
**முனைவர் சு. குமரன்**
**முனைவர் சு. இராமலிங்கம்**
**முனைவர் சந்திரிகா**
**முனைவர் த. பிரியா**

Estd 1973

**தமிழ்த்துறை**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
**(தன்னாட்சி)**

தேசிய மதிப்பீடு, மீள் தர நிர்ணயக் குழுவின் 'A' தகுதி பெற்றது
தனிச்சிறப்புத் திறன் கல்லூரித் தகுதி பெற்றது

**ஞானாம்பிகை நூற்பாலை (அஞ்சல்), கோயம்புத்தூர் – 641 029**
**போன் : 0422 – 2642095**
**E-mail : info@kongunaducollege.ac.in Website : www.kongunaducollege.ac.in**

# பன்னோக்குப் பார்வையில் தமிழ்மொழியும் இலக்கியமும்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் க. முருகேசன்<br>முனைவர் மா. சிதம்பரம்<br>முனைவர் சு. குமரன்<br>முனைவர் சு. இராமலிங்கம்<br>முனைவர் சந்திரிகா<br>முனைவர் த. பிரியா |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஜூலை, 2019 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 9843273994,7092092066 |
| பக்கங்கள் | : | XXII + 410 = 432 |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 80800 - 57 - 8**


# International Conference on Heterogeneous Perspectives in Tamil Language and Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. M. Chidambaram<br>Dr. S. Kumaran. Dr. S. Ramalingam.<br>Dr. Chandrika. Dr. D. Priya** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | July, 2019 |
| Published | : | **Department of Tamil<br>Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 9843273994, 7092092066 |
| Pages | : | XXII + 410 = 432 |
| Prize | : | **Rs. 400/-** |

# 238. ஞானப்பள்ளு இலக்கியத்தில் வெளிப்படும் திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள்: ஓர் ஆய்வு

மேரி வினிபிரிடா சுரேந்திரராஜ்
(விரிவுரையாளர்)
கிறிஸ்தவ நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சி நிலவியபோது மறைபரப்பாளர் கத்தோலிக்க மறையை மக்களிடையே பரப்ப வேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட்டனர். மறையைப் பரப்பும் செயற்பாடுகளில் ஈடுபட்ட அவர்கள் அதற்கென கையாண்ட ஊடகங்களுள் இலக்கியமும் சிறப்பிடம் பெறுகின்றது. கிறிஸ்தவ மறையைச் சாதாரண பொதுமக்கள் மத்தியிலே முன்னெடுத்த மறைபரப்பாளர், கத்தோலிக்க மறைசார்ந்த கருத்துக்களை நாடகப் பாங்கில் வெளிப்படுத்தி, மக்களை இலகுவில் கவரும் வகையில் பள்ளு போன்ற இலக்கியங்களைத் தோற்றுவித்துள்ளனர். உழவுத் தொழிலில் ஈடுபட்டவர்களின் வாழ்வில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிமையாகவும், இனிமையாகவும், சுவைக்கத்தக்க விதத்திலும் கூறுவனவாக இப் பள்ளு இலக்கியங்கள் காணப்படுகின்றன. இப் பின்னணியில் இலங்கையில் தோற்றம் பெற்ற ஞானப்பள்ளு இலக்கியத்தில் வரும் பாத்திரங்களூடாகக் கத்தோலிக்க மறைசார் இறையியல் கருத்துக்கள் சிறப்பாக முன்வைக்கப்பட்டுள்ளதுடன் திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டின் சில நிகழ்வுகளையும் இவ் இலக்கியம் எடுத்துரைக்கின்றது. ஞானப்பள்ளு இலக்கியம் குறித்து சில கட்டுரைகள் வெளிவந்திருப்பினும் அக்கட்டுரைகளில் ஞானப்பள்ளு வெளிப்படுத்தும் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள் குறித்த விளக்கத்தைப் பெறமுடியாமை ஆய்வு பிரச்சனையாகக் காணப்படுகின்றது. எனவே இவ் ஆய்வானது இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் தோன்றிய ஞானப்பள்ளு இலக்கியம் வெளிப்படுத்தும் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகளை இனங்கண்டு ஆய்வுக்கு உட்படுத்தி, அவற்றின் இறையியல் சிறப்பையும் முக்கிய விடயங்களையும் ஆவணப்படுத்துவதாக அமைகின்றது. ஞானப்பள்ளு இலக்கியத்தில் பழைய, புதிய ஏற்பாடுகளை மையப்படுத்திய பல விடயங்கள் முன்வைக்கப்பட்டிருப்பினும் ஆய்வின் வரையரையைக் கருத்திற்கொண்டு இலக்கியம் முன்வைக்கும் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகளே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும்

கிறிஸ்தவ இலக்கியங்கள் பல மறக்கப்பட்டும், மறைந்துள்ள நிலையில் இத்தகைய இலக்கியங்களைப் பதிவு செய்து, இவ் இலக்கியங்கள் தொடர்பான திறனாய்வுக் கருத்துக்களை விரிவாக இன்றைய தலைமுறையினருக்கு எடுத்துரைப்பதுடன், கிறிஸ்தவ தமிழ் இலக்கிய ஆய்வுப் பரப்பை வளப்படுத்தி, வலுவூட்டுதல் இவ் ஆய்வின் நோக்கங்களாகும். ஆய்வின் பயன்பாடாக செய்யுள் வடிவில் காணப்படும் ஞானப்பள்ளு இலக்கியத்திலுள்ள ஆழ்ந்த அறிவை இலக்கிய உலகத்திலும், இறையியல் உலகத்திலும் உறுதியுடன் பதிவு செய்தலாக அமைகின்றது. ஆய்வுக்கென மூல நூலான ஞானப்பள்ளு இலக்கிய செய்யுள்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் உரைநடை விளக்கங்களைப் பெற்று, பெறப்பட்ட தரவுகளை விவிலிய ஆதாரங்களுடன் திறனாய்வுக்கு உட்படுத்தி, பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

## ஞானப்பள்ளு இலக்கியம்

தமிழ்நாட்டில் காலத்திற்குக் காலம் பல பள்ளுப் பிரபந்தங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவ்வாறே இலங்கையிலும் பள்ளுப் பிரபந்தங்கள் பல எழுந்துள்ளன. அந்த வகையில் இலங்கையில் எழுந்த பள்ளுப் பிரபந்தங்களுள் ஒன்றாக ஞானப்பள்ளு திகழ்கின்றது. ஞானப்பள்ளை இயற்றிய ஆசிரியர் பற்றிய குறிப்பு அந்நூலிலோ அல்லது பிற சான்றுகள் மூலமாகவோ அறியக்கூடியதாய் இல்லை. இப் பள்ளுப்பிரபந்தத்தைக் கத்தோலிக்க மறையைத் தழுவிய தமிழ்ப் புலவர் ஒருவர் இயற்றியுள்ளார் என்பதை மட்டும் துணிந்து கூறக்கூடியதாய் உள்ளது.[5] மேலும் இந் நூலை இயற்றிய ஆசிரியர் தமிழில் நல்ல பரீட்சயமுடையவர் என்பதனை, இந் நூலினூடாகத் தெளிவாக அறியமுடிகிறது. அத்துடன் இவ்விலக்கியம் செந்நெறி இலக்கியமரபில் அமையப்பெற்றுள்ளதுடன், இலகுவில் அனைவரும் படித்துப் பொருள் அறிவது கடினம். புலவர் பள்ளுப் பிரபந்தத்தின் அமைப்பையும், போக்கையும் நன்கு கடைப்பிடித்து ஞானப்பள்ளுப் பிரபந்தத்தை இயற்றியதுடன், ஏனைய பள்ளுப் பிரபந்தங்களில் காணப்படும் சிருங்கார ரசத்தைக் கலக்க விடாமல் மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டுள்ளார்.[2] இந்நூலாசிரியர் போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை.

இயேசு நாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, கிறிஸ்தவ மறைசார் கருத்துக்களையும், நெறிமுறைகளையும் மக்களுக்குப் புகட்டும் ஊடகமாக, அனைவரும் படித்து பயனடையக்கூடிய வகையில் ஞானப்பள்ளு அமைந்துள்ளது. ஞானப்பள்ளுப் பிரபந்தம் ஈழத்து இலக்கிய மரபில் இருந்து விடுபட்டு உரோம், எருசலேம் ஆகிய இடங்களை விதந்து பாடும் தன்மையுடன் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் இலக்கிய படைப்பாளி கத்தோலிக்க மறைப் பெருமையை நிலை நாட்ட முற்பட்டிருக்கிறார் என்பது தெளிவு.

இவ்விலக்கியத்தின் கதையமைப்பு பள்ளு இலக்கியத்தின் பொதுவான இலக்கிய மரபையொட்டிச் செல்லினும் இதில் தோன்றும் பாத்திரங்களின் அமைப்பும், குணநலன்களும் பள்ளின் பொது மரபில் நின்று வேறுபட்டதாகவுள்ளது.[3] இவ்விலக்கியத்தில் வரும் நான்கு பாத்திரங்களும் கதையைச் சிறப்பிப்பதுடன், மூத்த பள்ளி இளைய பள்ளி ஆகிய இருவரைச் சுற்றியே கதை வளர்கிறது. நூலின் பெரும் பகுதி கிறிஸ்து பெருமானின் புகழை ஜெருசலேம் பள்ளி, உரோம பள்ளி ஆகிய இருவர் வாயிலாகப் பாடுவதாகவே அமைந்துள்ளது. பள்ளியர் பெருமை கூறல், நாட்டு வளம், பள்ளியர் தலைவன் பெருமை கூறல், பள்ளியர் ஒருவரையொருவர் ஏசல் என்னும் பகுதிகளில் கிறிஸ்தவ மறையின் சிறப்பையும், தலப் பெருமையையும், இறைவனின் புகழையும் ஆசிரியர் வர்ணிக்கின்றார்.

## ஞானப்பள்ளு முன்வைக்கும் திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள்

ஞானப்பள்ளு இலக்கியத்தில் வரும் கதாப்பாத்திரங்களான மூத்த, இளைய பள்ளியரிடையே ஏற்படுகின்ற வாய்ச்சால சண்டையில் பழைய, புதிய ஏற்பாட்டுக் கருத்துக்களுடன், இரு பள்ளியரினதும் நாட்டுச் சூழலில் நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவங்களும் எடுத்துரைக்கப்படுகின்றன. ஆரம்பக்காலக் கட்டங்களில் வரலாற்றில் நிகழ்ந்த நிகழ்வுகளை அப்படியே குறித்து வைக்க வேண்டும் என்ற நோக்குடன் வரலாறு எழுதப்படவில்லை. மாறாக இறைவன் இவ் அற்புதங்கள் அனைத்தையும் எங்கள் வரலாற்றில் செய்தருளினார் என திருப்புகழ் விளங்கும் நோக்குடனே எழுதப்பட்டுள்ளது. எனவே இதனை இறைபுகழ் வரலாறு எனவும் குறிப்பிடலாம்.

திருவிவிலியத்தை மீட்பின் வரலாற்று நூல் எனக் குறிப்பிடலாம். திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்களின் மீட்பு வரலாறும், புதிய ஏற்பாட்டில் இறைமகன் இயேசுவின் பிறப்பு, அவரது போதனை, பணி வாழ்வு, பாடுகள், மரணம், உயிர்ப்புடன் தொடர்புடைய விடயங்களும் முதன்மைப் படுத்திக் குறிப்பிடப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நிகழப்பெற்ற முக்கிய நிகழ்வுகளாக உலக படைப்பு, அவர்களின் பாவம், பிதாப்பிதாக்களின் தந்தை ஆபிரகாம், பெரும் வெள்ளப் பெருக்கில் நின்று காப்பாற்றப்பட்ட நோவா, பல்வேறு நாடுகளின் கீழ் அடிமைகளாக துன்பப்பட்ட இஸ்ராயேல் மக்களின் மீட்பின் வரலாறு என ஞானப்பள்ளுப் பிரபந்தத்தின் ஆசிரியர் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நிகழப்பெற்ற முக்கிய சம்பவங்களை இப் பிரபந்தம் எழுந்த காலத்து மக்களின் அறிவுக்கு எட்டக்கூடிய வகையில் ஞானப்பள்ளினூடாக தெளிவுட்படுத்துவதையும் பார்க்கலாம்.

## இறைவனின் படைப்பு

திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் தொடக்க நூலின் முதல் இரண்டு அதிகாரங்களிலும் சித்தரிக்கப்படும் இறைவனின் படைப்பு

நிகழ்வை ஞானப்பள்ளு இலக்கியத்தின் ஆசிரியரும் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். அதாவது இவ்வுலகம், விண்ணகம், வானத்திலே ஒளிதருகின்ற சூரியனும், சந்திரனும், தாரகைக் கூட்டமும், வானிலே சஞ்சரிக்கின்ற முகிற்கூட்டங்களும், மலைகளும், எப்பொழுதும் நீர் சுரக்கும் ஊற்றுக்களும் என இறைவன் அனைத்தையும் படைத்து, இவை அனைத்திற்கும் அதிபதியாய் திகழ்கின்றார் என்பதை இலக்கியத்தில் வரும் 6, 27 ஆவது செய்யுள்களில் குறிப்பிடுவதுடன், இறைவனே பாதாளத்தையும், வானத்தையும், பூமியையும் படைத்து அனைத்திற்கும் நன்மைகளின் ஊற்றானவர், குளிர்ச்சியான ஒளி பொருந்திய சந்திரனையும், சூரியனையும் படைத்துப் பழமையான புவிக்குத் துணையாக வைத்தவரும், அடிமைகளும் ஞானிகளும் புகழ்ந்து இறை புகழ் பாடுவதற்குப் பாடல்களுக்கான சுருதியையும் தந்து துணையாய் இருப்பவரும், எந்நாளும் அருள் புரிபவரும் இறைவனே என்பதை ஆசிரியர் பின்வரும் செய்யுளிள் தெளிவுபடுத்துகிறார்.

***'அண்டர் வானும் புவியும்ப டைத்தவ***
***ரத்த னைக்குமு பகார மானவர்***
***துண்ட வான்மதி சூரிய னைச்செய்து***
***தொல்பு விக்குத் துணையாக வைத்தவர்.***
***தொண்டர் ஞானிகள் தோத்திரம் பண்ணவே***
***சுருதி தந்து துணையாயி ருப்பவர்***
***கண்டெந் நாளு மளவிடொண் ணாதவர்***
***கர்த்த ரானவ ராகுமென் நெஞ்சமே' (ஞா. ப. செ 51)***

தொடர்ந்தும் இதே கருத்தை ஆசிரியர் ஞானப்பள்ளு இலக்கியத்தில் வரும் 113, 220, 224 செய்யுள்களிலும் முன்வைத்துள்ளார்.

## பிதாப்பிதாக்களின் தந்தை ஆபிரகாம்

பிதாப்பிதாக்களின் தந்தை என்றழைக்கப்படும் ஆபிரகாமை இறைவன் அழைத்து உனது ஒரே மகன் ஈசாக்கை எனக்கு பலி தருவாய் எனக் கேட்க ஆபிரகாமும் அதற்குத் தருவேன் என உறுதி பூண்டார், அந்நாளில் மகனை பலியிடவென பீடம் ஏற்றி அருமையான தனது மகனை வெட்டப்போகிற நேரம் தேவ தூதர்கள் அதனைத் தடுத்து நிறுத்திய நிகழ்வு நிகழப்பெற்ற நாடு எருசலேம் நாடே எனப் பின்வரும் செய்யுளில் முன்வைக்கின்றார்.

***'அந்த மாதியொன் றில்லாத சோதி***
***யருள்பெ ருகஆபி ராமைக் கூவியுன்***
***மைந்த னானவ னைத்தரு வாய்பெலி***
***மாமு னியென வாய்மைகள் கூறி***
***அந்த நாளிற் பெலிபீட மேற்றி***
***அருஞ்சு தன்றனை யறுக்கின்ற நேரம்***
***சிந்தை கூரவே வானேன் விலக்குஞ்***
***செருச லைத்திரு நாடெங்கள் நாடே (செ.31)***

ஞானப்பள்ளு இலக்கிய ஆசிரியரால் முன்வைக்கப்படும் இக்கருத்தை திருவிவிலியத்தில் (தொ. நூ. 22:2) பின்வருமாறு நோக்கலாம் 'நீ அன்பு கூறும் உன் ஒரேமகனான ஈசாக்கை அழைத்துக்கொண்டு மோரியா நிலப்பகுதிக்குச் செல் அங்கு நான் உனக்குக் காட்டும் மலைகளில் ஒன்றின் மேல் எரிபலியாக அவனைப் பலியிட வேண்டும் என்றார். இதனையே ஞானப்பள்ளு இலக்கியத்தின் ஆசிரியர் அக்கால மக்கள் விளங்கிக் கொள்ளத்தக்க விதத்தில் முன்வைக்கின்றார்.

## நோவாவின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு

மண்ணுலகில் மனிதனின் தீச்செயல்கள் பெருகுவதைக் கண்ட இறைவன் மனிதர் முதல் கால்நாடைகள், ஊர்வன, வானத்துப் பறவைகள் அனைத்தையும் நீரினால் அழித்தார். ஆயினும் நோவாவிற்கு ஆண்டவரின் அருள் பார்வை கிடைத்தது, இச்சம்பவத்தை நாம் வேதாகமத்தில் தொடக்க நூல் ஏழாம் அதிகாரத்தில் பார்க்கலாம். இதனையே ஞானப்பள்ளு இலக்கியத்தில் வரும் பின்வரும் செய்யுள் கூறிநிற்கின்றது.

*'ஆண்ட தானவி ரண்டாயி ரஞ் சின்ன*
*மம்பு வியைச்ச லத்தால ழித்து*
*மீண்டும் நோவை யிடமாக வேயித்த*
*மேதினியை வியனாகக் காத்தோன்'* **(ஞா. செ.56)**

அதில் கூறப்படும் விடயமானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக இறைவன் நீரினால் இப் பூமியை அழித்து மீண்டும் நோவாவிடம் அதனை ஒப்படைத்து காத்து வருகின்றார் என வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் பெறும் நிகழ்வை ஆசிரியர் சிறப்பிப்பதைக் காணக்கூடியதாயுள்ளது.

## இஸ்ரயேல் மக்கள்

திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் காணப்படும் முக்கிய நிகழ்வுகளில் இஸ்ரயேல் மக்களின் அடிமை வாழ்வும் பாலைவன அனுபவமும் குறிப்பிடத்தக்கது. இதனை எடுத்துரைக்கும் ஞானப்பள்ளு இலக்கியத்தின் ஆசிரியர் 'இளைய பள்ளியின் ஏசல்' என்னும் பகுதியில் இஸ்ரயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து இறைவன் மீட்டு வருகையில், அவர்களை பின் தொடர்ந்த பார்வோன் மன்னனின் படையினர் கடலில் மடிந்து போயினர். இறைவன் தொடர்ந்தும் பாலைவனத்தில் மக்களுடனிருந்து அவர்களுக்கு உணவாக மன்னாவை பொழிந்து பசி போக்கினார். இவ்வாறு உதவிகள் பல செய்த இறைவனுக்கு எதிராக முணுமுணுத்தது உனது நாட்டை சார்ந்த மக்களே என இளைய பள்ளி மூத்த பள்ளியைக் குறை கூறுகின்றாள். இவ்விடயம் பின்வரும் செய்யுளில் காணப்படுவதைப் பார்க்கலாம்.

*'கத்த னாகி யேயிருந்து மன்னர் சேனையைக்*
*கார ணத்தி னால்மடிய வேக டலிலே*
*வைத்து மக்க ளுக்குவழி போக விடுத்து*

*வானமுத போச னத்கைத் தந்த நாதனை*
*மத்தி யான மாகுமுதற் சல்லி யவாரம்*
*மாறு பாடு செய்து கொண்ட வஞ்ச கிநீயே'*
*(ஞா. செ.121)*

## எருசலேம் மக்களின் பாவச் செயல்கள் குறித்த குறிப்பு

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் எருசலேம் நாட்டை மையமாகக் கொண்டு நிகழப் பெற்ற வரலாற்றுச் சம்பவங்களை ஞானப்பள்ளு இலக்கியத்தின் வழி குறிப்பிட்டுள்ள ஆசிரியர், அந்நாட்டு மக்களின் பாவச் செயல்களையும் சுட்டிக்காட்டுகின்றார். இங்கு எருசலேம் நகர் குறித்து இளைய பள்ளி மூலம் முன்வைக்கப்படும் பாவச் செயல்கள் அனைத்தும் மூத்த பள்ளியின் குற்றச்சாட்டுக்களாகவே இலக்கியத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. இப் பள்ளுப் பிரபந்தத்தில் வரும் 234 ஆவது செய்யுளில் இறைமகன் இயேசு மானிடனாய் இவ்வுலகில் அவதரிக்கும் முன்பு, எருசலேம் நாட்டைச் சார்ந்த உனது மக்கள் பிற தெய்வங்களை வழிபட்டனர் எனக்குறிப்பிட்டுள்ளார். இங்கு இறைவனின் கட்டளையை மீறி எருசலேம் நாட்டு மக்கள் பாவம் செய்தார்கள் என்பதையே இளைய பள்ளி சுட்டிக்காட்டுகிறாள். எருசலேமில் ஆரம்பத்தில் *சலோம்* என்ற தெய்வத்தை வழிபட்டு வந்ததற்கான குறிப்பு ஒன்றும் காணப்படுகின்றது. எருசலேம் என்றால் *சலோமின்* நகர் அதாவது சமாதானத்தின் நகர் என்னும் பொருள்பட்டது.[4] எனவே இங்கு ஞானப்பள்ளு இலக்கியத்தின் ஆசிரியரும் இப்பின்னணியைக் கருத்திற் கொண்டு மேற்கூறிய விடயத்தை முன்வைத்திருக்கலாம்.

இறைவனின் உதவிகள் அனைத்தையும் பெற்ற மக்கள், உண்மை மறையை மறந்து இறை தந்தைக்கு எதிராகச் செயற்பட்டார்கள் என்பதைப் பள்ளன் பண்ணைக்காரனிடம் குறிப்பிடுகின்றார். இதனைப் பின்வருமாறு செய்யுளில் பார்க்கலாம்.

***'ஆண்டே யாண்டே அதிகப லன்பெற்று***
***அந்த நாளிலி ருந்தசெ ருசலை***
***வேண்டுவா ளென்று மூத்தவள் பள்ளிமெய்***
***வேத மானதை வீணாக்கிப் போட்டாள்'***
***(ஞா. ப. செ. 176)***

தொடர்ந்து மூத்த பள்ளி குறித்த குற்றச்சாட்டுக்களைப் பள்ளன் பண்ணைக்காரனிடத்தில் கூறுகையில் பின்வரும் கருத்துக்களை முன் வைப்பதைப் பார்க்கலாம். மூத்த பள்ளி தன்னிடமுள்ள செல்வத்தால் அகந்தை கொண்டு என்னை மறந்தாள் என்றும், உலக மகிழ்விலே கழிப்புடன் நின்று, இறைவனைத் தினமும் மறந்தாள், தூய்மையையும் இழந்தாள். பொருந்தா குணமும் கொண்டு, தவம் செய்தலையும் மறந்து வாழ்ந்துக் கொண்டிருக்கும் இவள் என்மீது சிறிதளவும் இரக்கமற்றவள். இவள் என்னை நேசித்து வணங்க மாட்டாள்,

இவ்வுலகில் என்னை ஆர்ப்பரித்துத் துதிக்க மாட்டாள், என்னை மணந்தும் அவள் என்னைப் புரிந்து கொள்ளவில்லை, அன்றாட பகைச் சொல்லையே தன்னிடம் கொண்டவளாகக் காணப்படுகிறா எனப் பல்வேறு குற்றச்சாட்டுக்களைத் தொடர்ச்சியாகப் பள்ள முன்வைப்பதை ஞானப்பள்ளு இலக்கியத்தில் வரும் செய்யு பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றது.

*'தன்மங் கொண் டுபொருந்தாள் - தவம்*
*நன்கென் றுவருந்தாள்*
*வினைகொண் டுமிருந்தாள் - சற்று*
*மெனக் கொன் றுமிரங்காள்*
*பூசித் தும்வணங்காள் - என்னை*
*நேசித் தும்மிணங்காள்' (ஞா. ப. செ. 187)*

இங்கு இலக்கியத்தில் குறிப்பிடப்படும் எருசலேம் நாட்டைச் சார்ந் மக்களின் குறைகள் அனைத்தும் மூத்த பள்ளியின் குறைகளாகவே குறிப்பிடப்படுகின்றன.

## பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த முக்கிய நபர்கள்

இலக்கியத்தின் வழி வரலற்றில் நடந்தேறிய சம்பவங்களை எடுத்துரைக்கும் ஆசிரியர், அவ் வரலாற்றுடன் தொடர்புடைய சில முக்கிய நபர்கள் குறித்த கருத்துக்களையும் முன்வைத்துள்ளார். இதில் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் முக்கியத்துவம் பெறும் நபர்களாக இறைவாக்கினர்கள், தூயவர்களின் வாழ்வுடன் தொடர்புடைய சில குறிப்புக்களையும் பார்க்கலாம். இலக்கியத்தில் குறிப்பிடப்படும் பழைய ஏற்பாட்டுக்கால வரலாற்று மாதர்கள் என நோக்குகையில் அவர்களுள தீர்க்கதரிசிகள்,இறைவாக்கினர்கள்,யோபு, தோபித்து, தோபியாச போன்றோர் குறித்த கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை கண்கூடு

## முடிவுரை

இலங்கையில் பேர்த்துக்கேயரின் ஆளுயின் போது கத்தோலிக்க மறையைப் பரப்பும் நோக்குடன் செயற்பட்ட மறைபரப்பாளர்கள் மறைக் கருத்துக்களை மக்கள் விரும்பி ஏற்கத்தக்க வகையில அம்மக்களிமையே பயன்பாட்டிலிருந்த, வரவேற்கத்தக்க இலக்கியங்களை ஊடகமாகக் கையாண்டார்கள். அந்த வகையில உழவர்களின் வாழ்வை மையப்படுத்திய பள்ளு இலக்கியத்தினூடாக கத்தோலிக்க மறைசார்ந்த இறையியல், வரலாற்றுக் குறிப்புக்களையும எடுத்துரைத்துள்ளனர். ஞானப்பள்ளு இலக்கியமானது கத்தோலிக்க மறை உண்மைகளை அக்கால மக்களுக்கு எடுத்துரைத்த சிறந்த சிற்றிலக்கியமாகும். இவ் ஆய்வில் ஞானப்பள்ளு வெளிப்படுத்தும் திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஞானப்பள்ளு திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் வரும் முக்கிய நிகழ்வுகளையே முதன்மைப்படுத்தியுள்ளது என்பதை ஆய்வில் அறிய முடிகின்றது. அதாவது படைப்பு, ஆபிரகாம்

நோவ காலத்து பெருவெள்ளப்பெருக்கு, எருசலேம் மக்களின் பாவச் செயல்கள், அக்காலத்து முக்கிய நபர்களில் சிலர் பற்றிய குறிப்பை அறிய முடிகின்றது.

ஞானப்பள்ளு இலக்கியத்தில் குறிப்பிடப்படும் விடயங்கள், ஏற்கனவே வரலாற்றில் நிகழப்பெற்று விவிலியத்தில் எழுத்துருப் பெற்று விளங்கும் சம்பவங்களாகத் திகழ்வதுடன், அவற்றை முன்வைக்க விரும்பும் இலக்கியத்தின் ஆசிரியர் அவற்றுடன் தான் கூறவந்த கருத்துக்களையும் இணைத்து மூத்த, இளைய பள்ளியரிடையே ஏற்படுகின்ற சண்டையை மேலும் விரிவுப்படுத்தி மக்களைக் கவரக்கூடிய விதத்தில் கருத்துக்களை முன்வைக்கின்றார். இங்கு ஆசிரியரின் முதன்மையான நோக்கம், மறை சார்ந்த இறையியல், வரலாற்று பின்னணியை மக்கள் இலகுவில் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதே. இதனை அடிப்படையாகக் கொண்டே கருத்துக்களை கூறிநிற்கின்றார். இவ்வாறு மறைசார் உண்மைகளை தெளிவுப்படுத்தும் ஆசிரியர் விவிலியத்தில் அதிக பரீட்சயம் உடையவராய் இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவு. அத்தோடு வரலாற்றுச் சம்பவங்களையும் தெளிவாக முன்வைக்கும் திறனுடையவராகவும் திகழ்ந்துள்ளார்.

## உசாத்துணை நூல்கள்


1. சிவலிங்கராஜா, எஸ்., (2009), *ஈழத்து தமிழ் இலக்கியச் செல்நெறி*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

2. ஜம்புலிங்கம் பிள்ளை, சே. வெ., (1935), *கதிரைமலைப் பள்ளு*, புரோகிரஸிவ் அச்சகம், சென்னை.

3. ஞான இராபின்சன்., (1972), *திருமறைத் தோழன்*, கிறிஸ்தவ இறையியல் நூலோர் குழு, மெட்ராஸ்.

4. சுவாமி, சி. கே., (1978), *இறைவனின் குரல்*, புனித சூசையப்பர் கல்லூரி, திருச்சி.